# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2496 - 2026 ජූලි මස 03 වැනි සිකුරාදා - 2026.07.03

2496 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 842 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, யூலை மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

841 – B82807 - 5403 (2026/07)

# மாகாண சபை அறிவித்தல்கள்

**1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படுகின்ற 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கத்திற்கான கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2(2) ஆம் உப பிரிவின் கீழ் விசேட கட்டளைப் படி அதிகாரத்தை அளித்தல்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படுகின்ற 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறலவு சங்கங்கள் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், வடமேல் மாகான சபை ஆளுநராகிய திஸ்ஸ வர்ணசூரிய ஆகிய நான், வடமேல் மாகானத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளதும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 172 ஆம் ஆண்டின் 05 இலக்க கூட்டுறவு சங்க சட்டமும் அதன் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிய அட்டவணையில் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா அதிகாரமும் அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி தொடக்கம் இத்துடன் கையளிக்கின்றேன்.

திஸ்ஸ வர்ணசூரிய,
வடமேல் மாகாண ஆளுநர்.

குருநாகல்.
2026, பெப்புருவரி 27.

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* | *III ஆம் நிரல்* |
|---|---|---|
| கொத்திகொட கங்காணம்கே லசந்தி குணதிலக | 2025.10.21 | கூட்டுறவு சங்க சட்டத்தின் 3,5,6,7,8,9,33,39,44 [44(6) தவிர்த்து] 45, 46,48, 49, 50,52,53, 54, 58[58(3) மற்றும் 58(5) தவிர்த்து] 59, 68 மற்றும் 72 ஆகிய பந்தியின் கீழ் ஆணையாளரும் பதிவாளரினால் ஏல்லா அதிகார விதிகளின் 4,11,15, 16(ii), 18,19,2 7,32,33,35,37,39,40,41,42,48, 49[49 (xii) தவிர்த்து] 51, 52 மற்றும் 53 க்கான விதிகளின் கீழ் மற்றும் பதிவாளர் அவர்களின் அணைத்து அதிகாரங்களும் |

02-33

## வட மத்திய மாகாண சபை

## 2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வீதிப் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையின் திருத்திய பட்டயம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வட மத்திய மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வட மத்திய மாகாண சபையின் 1994 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க வீதிப் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையை அமைத்தலின் திருத்திய மற்றும் 2003 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டிகள் பட்டயத்தை வரையறுத்து வீதிப் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபை பட்டயத்துடன் ஒருங்கிணைத்தல் பட்டயம்.

2000.03.03 ஆம் திகதிய 1121/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் மாகாண சபைகள் அறிவித்தல்களின் கீழ் வெளியிடப்பட்ட 04 ஆவது மற்றும் 05 ஆவது அட்டவணை, 2008.11.21 ஆம் திகதிய 1577 ஆம் இலக்க வர்த்தமானியில் மாகாண சபைகள் அறிவித்தல்களின் கீழ் வெளியிடப்பட்ட "பஸ் வண்டிகள் மாதாந்த போக்குவரத்துச் சேவைகள் அனுமதிப்பத்திர விலை மனுவை திருத்தம் செய்தல்" ஆவணம், பஸ் வண்டிகள் வீதி அனுமதிப்பத்திர காகிதாகிகள் கட்டணம் மற்றும் தண்டப் பணம் காலதாமதித்தல் கூடுதல் கட்டண ஆவணம், 2016.12.16 ஆம் திகதிய 1997/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் மாகாண சபைகள் அறிவித்தல்களின் கீழ் வெளியிடப்பட்ட வீதி அனுமதிப்பத்திர கட்டணங்கள் I, II, III மற்றும் IV அட்டவணைகள், மாதாந்த அனுமதிப்பத்திர ஆவணம், மாதாந்த அனுமதிப்பத்திர காலதாமத கட்டண ஆவணம், நடத்துனர் அனுமதிப்பத்திர கட்டண ஆவணம், 2017.06.22 ஆந் திகதிய 2024/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் மாகாண சபைகள் அறிவித்தல்களின் கீழ் வெளியிடப்பட்ட முச்சக்கர வண்டிகள் புதிய பதிவு மற்றும் வருடாந்த புதுப்பித்தல் கட்டணங்கள் ஆவணத்திற்கு பதிலாக புதிய கட்டண திருத்தத்தை சகலரும் தெரிந்துகொள்ளும் படியாக வெளியிடுகிறேன். இந்த புதிய கட்டணங்கள் திருத்தம் வர்த்தமானியில் வெளியாகும் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும்.

எம். சிரிஸ்கந்தகுமார்,
செயலாளர்,
போக்குவரத்து, இளைஞர் விவகாரங்கள்,
கூட்டுறவு, வர்த்தகம், உணவு மற்றும்
கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு,
வட மத்திய மாகாணம்.

வட மத்திய மாகாண சபை,
2026, யூன் 02.

### கட்டண திருத்தம் - 2026

| *தொ. இல.* | *அறவிடும் தலைப்பு* | *தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.)* | *உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்)* |
|---|---|---|---|
| 01. | I. பயணிகள் சேவைகள் சாதாரண சேவைகள்/ சிசு செரிய சேவைகள்/ கெமி செரிய சேவைகள்/ சொகுசு சேவைகள்/ மேலதிக சேவைகள்/ சாதாரண பயணிகள் சேவைகள் மற்றும் சிசு செரிய சேவைகள் இரண்டும் அடங்கிய பயணிகள் சேவைகளுக்கான அனுமதிப்பத்திர விண்ணப்பபடிவக் கட்டணம். | - | I. புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திர கட்டணம் ரூ. 1000.00<br>II. வருடாந்தம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் விண்ணப்பபடிவ கட்டணம் ரூ. 100.00<br>III. பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் மற்றொருவருக்கு மாற்றுதல் / மாற்றீடு செய்தல் / வீதிகள் திருத்த விண்ணப்பபடிவ கட்டணம் ரூ. 500.00<br>IV. பேருந்து ஒம்னி கடிதங்கள்/ பேருந்து விடுவித்தல் கடிதங்கள்/ லீசிங் கடன் கடிதங்கள் விண்ணப்பபடிவங்களுக்கான கட்டணம் ரூ.100.00 |

| *தொ. இல.* | *அறவிடும் தலைப்பு* | *தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.)* | *உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்)* |
|---|---|---|---|
| | II. பயணிகள் சேவைகளில் சாதாரண சேவைகள்/ சிசு செரிய சேவைகள் / கெமிசெரிய சேவைகள்/ சொகுசு சேவைகள் / மேலதிக சேவைகள்/ சாதாரண சேவைகள் மற்றும் சிசு செரிய சேவைகள் இரண்டும் அடங்கிய வீதி அனுமதிப்பத்திரம் / பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை / அலுவலக அதிகாரிகள் போக்குவரத்து சேவைகளுக்கான புதிய அனுமதிப்பத்திர காகிதாகிகள் சேவைக் கட்டணம். | 500.00 | 500.00 |
| | III. சாதாரண சேவைகள்/ சிசு செரிய சேவைகள் / கம்செரிய சேவைகள்/ சொகுசு சேவைகள் / மேலதிக சேவைகள்/ சாதாரண சேவைகள் மற்றும் சிசுசெரிய சேவைகள் இரண்டும் அடங்கிய வீதி அனுமதிப்பத்திரம்/ மாணவர் போக்குவரத்துச் சேவைகள் / அலுவலக போக்குவரத்து சேவைகள்/ வருடாந்தம் புதுப்பித்தல், மாற்றீடு, உரிமம் மாற்றுதல் வீதிகள் திருத்தம் காகிதாகிகள் கட்டணம் | 500.00 | 500.00 |
| 02. | I. புதிய பயணிகள் சேவைகள் சாதாரண அனுமதிப்பத்திர கட்டணம் | 100,000.00 | I. A மற்றும் B வகை பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரம் மற்றும் A1 மற்றும் B1 வகை அனுமதிப்பத்திரத்திற்கு டெண்டர் ஒழுங்குகள் பின்பற்றப்படும்.<br>II. C வகை புதிய பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர ஆரம்ப கட்டணம். 500,000.00<br>III. D வகை புதிய பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர ஆரம்ப கட்டணம். 300,000.00 |
| | II. புதிய சொகுசு பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர கட்டணம். | 100,000.00 | டெண்டர் ஒழுங்குகள் பின்பற்றப்படும் |
| | III. (மேலதிக சேவைகள் வழங்குதல்) புதிய பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர கட்டணம். | | I. A / A1 வகை – 300,000.00<br>II. B / B1 வகை – 250,000.00<br>III. C வகை – 200,000.00<br>IV. D வகை – 100,000.00 |

| *தொ. இல.* | *அறவிடும் தலைப்பு* | *தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.)* | *உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்)* |
|---|---|---|---|
| 03 | I. பயணிகள் சாதாரண சேவைகள் அனுமதிப்பத்திர வருடாந்த புதுப்பித்தல் கட்டணம். | ஆசனத்திற்கு 100.00 | I. A வகை 20,000.00<br>II. A1 வகை 25,000.00<br>III. B வகை 15,000.00<br>IV. B1 வகை 17,500.00<br>V. C வகை 12,500.00<br>VI. D வகை 10,000.00 |
| | II. பயணிகள் சேவைகள் சிசுசெரிய / கெமிசெரிய அனுமதிப்பத்திர வருடாந்த புதுப்பித்தல் கட்டணம் | ஆசனத்திற்கு 100.00 | I. ஒரு பகுதிக்கு தூரம் கி.மீ. 30 க்கு மேல் 15,000.00<br>II. ஒரு பகுதிக்கு தூரம் கி.மீ. 30 க்கு குறைந்த 10,000.00 |
| | III. பயணிகள் சாதாரண சேவைகள் மற்றும் சிசுசெரிய சேவைகள் இரண்டும் அடங்கிய பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர வருடாந்த புதுப்பித்தல் கட்டணம். | ஆசனத்திற்கு 100.00 | பயணிகள் சாதாரண சேவைகள் அனுமதிப்பத்திர வருடாந்த புதுப்பித்தல் முழுமையான கட்டணம் + சிசு செரிய சேவைகள் அனுமதிப்பத்திர வருடாந்த புதுப்பில் கட்டணத்தில் 50% |
| | IV. மாகாண சொகுசு பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர வருடாந்த புதுப்பித்தல் கட்டணம் | - | ஆசனத்திற்கு 200.00 |
| | V. மேலதிக பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர வருடாந்த புதுப்பித்தல் கட்டணம். | ஆசனத்திற்கு 100.00 | I. A /A1 வகை 10,000.00<br>II. B /B1 வகை 7,500.00<br>III. C வகை 6,250.00<br>IV. D வகை 5,000.00 |
| 04 | I. சாதாரண பயணிகள் சேவைகள் / சொகுசு பயணிகள் சேவைகள் / சிசு செரிய சேவைகள் / கெமிசெரிய பயணிகள் சேவைகள்/ மேலதிக சேவைகள்/ சாதாரண சேவைகள் மற்றும் சிசு செரிய சேவைகள் இரண்டும் அடங்கிய பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரம் நீடித்தல் கட்டணம். | 100.00 | 500.00 |
| | II. பயணிகள் சேவைகள் மற்றும் சிசுசெரிய சேவைகள் இரண்டும் அடங்கிய பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திரம் நீடித்தல் கட்டணம் | 100.00 | சாதாரண பயணிகள் சேவைகள் நீடித்தல் கட்டணம் + சிசு செரிய சேவைகள் நீடித்தல் கட்டணம். |
| 05 | I. சாதாரண பயணிகள் சேவைகள் ஈடுபடுத்தபட்ட பேரூந்துக்கு பதிலாக வேறு பேரூந்து ஒன்றை மாற்றுவதற்கான கட்டணம் (மாறறம் செய்தல்) | 10,000.00 | I. A/ A1 வகை 25,000.00<br>II. B/ B1 வகை 20,000.00<br>III. Cவகை 15,000.00<br>IV. D வகை 10,000.00 |
| | II. சிசுசெரிய /கெமிசெரிய பயணிகள் சேவைகள் ஈடுபடுத்தப்பட்ட பேரூந்துக்கு பதிலாக வேறு பேரூந்து ஒன்றை மாற்றுவதற்கான கட்டணம் (மாற்றுதல்) | 10,000.00 | I. ஒரு பகுதிக்கு தூரம் 30 கி.மீ. க்கு மேல் 20,000.00<br>II. ஒரு பகுதிக்கு தூரம் 30 கி.மீ. க்கு குறைந்த 15,000.00 |

| *தொ. இல.* | *அறவிடும் தலைப்பு* | *தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.)* | *உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்)* |
|---|---|---|---|
| | III. மாகாண சொகுசு பயணிகள் சேவைகள் பேரூந்து மாற்று வதற்கான கட்டணம் | - | 20,000.00 |
| | IV. மேலதிக பயணிகள் சேவைகள் ஈடுபடுத்தப்பட்ட பேரூந்துக்கு பதிலாக வேறு பேரூந்து ஒன்றை மாற்று வதற்கான கட்டணம் (மாற்றுதல்) | 10,000.00 | I. A /A1 வகை 12,500.00<br>II. B /B1 வகை 10,000.00<br>III. C வகை 7,500.00<br>IV. D வகை 5,000.00 |
| | V. சாதாரண பயணிகள் சேவைகள் மற்றும் சிசு செரிய சேவைகள் இரண்டும் அடங்கிய பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திர பேரூந்து ஒன்றை மாற்றுவதற்கான கட்டணம் (மாற்றுதல்) | 10,000.00 | சாதாரண பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திர மாற்றக் கட்டணம் + சிசு செரிய மாற்றக் கட்டணத்தில் 50% |
| 06 | I. சாதாரண பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திர உரிமையை மாற்றுதல் கட்டணம். (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகள் தவிர்ந்தவர்களுக்கு) | 100,000.00 | I. A வகை – 1,250,000.00<br>II. A 1 வகை – 1,500,000.00<br>III. B வகை – 750,000.00<br>IV. B1 வகை – 1,000,000.00<br>V. C வகை – 500,000.00<br>VI. D வகை – 300,000.00 |
| | II. சாதாரண பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர உரிமை மாற்றுதல் கட்டணம். (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகளுக்கு) | 50,000.00 | 50,000.00 |
| | III. சிசு செரிய / கெமி செரிய பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர உரிமை மாற்றுதல் கட்டணம் (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகள் தவிர்ந்தவர்களுக்கு) | 100,000.00 | I. ஒரு பகுதிக்கு தூரம் கி.மீ. 30 க்கு மேல் 300,000.00<br>II. ஒரு பகுதிக்கு தூரம் கி.மீ. 30 க்கு குறைந்த 200,000.00 |
| | IV. சிசு செரிய / கெமி செரிய பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திர உரிமை மாற்றுதல் கட்டணம் (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகளுக்கு) | 50,000.00 | 50,000.00 |
| | V. மாகாண சொகுசு பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திர உரிமை மாற்றுதல் கட்டணம் (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகள் தவிர்ந்தவர்களுக்கு) | - | I. A வகை – 1,250,000.00<br>II. A 1 வகை – 1,500,000.00<br>III. B வகை – 750,000.00<br>IV. B1 வகை – 1,000,000.00<br>V. C வகை – 500,000.00<br>VI. D வகை – 300,000.0 |
| | VI மாகாண சொகுசு பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திர உரிமை மாற்றுதல் கட்டணம் (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகளுக்கு) | - | 50,000.00 |

| *தொ. இல.* | *அறவிடும் தலைப்பு* | *தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.)* | *உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்)* |
|---|---|---|---|
| | VII. மேலதிக பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர உரிமை மாற்றுதல் கட்டணம்<br>1. வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகள் தவிர்ந்த ஏனையோருக்கு மேலதிக அனுமதிப் பத்திரம் மாற்றம் செய்யப்படமாட்டாது.<br>2. வாழ்க்கை துணை மற்றும் பிள்ளைகளுக்கு அளிப்பு பத்திரத்தினை திருத்தும் சந்தர்ப்பத்தில் மட்டும் மாற்றீடு செய்யப்படும். | - | 25,000.00 |
| | VIII. சாதாரண பயணிகள் சேவைகள் மற்றும் சிசு செரிய சேவைகள் இரண்டும் அடங்கிய பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திர உரிமை மாற்றுதல் கட்டணம். (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகள் தவிர்ந்தவர்களுக்கு) | - | சாதாரண பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திர உரிமை மாற்றம் செய்தல் கட்டணம் + சிசு செரிய சேவைகள் அனுமதிப் பத்திரம் உரிமை மாற்றம் செய்தல் கட்டணம் |
| | IX. சாதாரண பயணிகள் சேவைகள் மற்றும் சிசுசெரிய சேவைகள் இரண்டும் அடங்கிய வீதி அனுமதிப்பத்திர மாற்றீடு செய்தல் கட்டணம் (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகளுக்கு) | - | 50,000.00 |
| 07 | I. சாதாரண பயணிகள் சேவைகள்/ சிசு செரிய சேவைகள் / மேலதிக பயணிகள் சேவைகள் / சாதாரண பயணிகள் சேவைகள் மற்றும் சிசுசெரிய சேவைகள் இரண்டும் அடங்கிய வீதி அனுமதிப் பத்திர (சேவை வீதி மாற்றக் கட்டணம்)<br>1. சாதாரண பயணிகள் சேவைகள் மற்றும் சிசு செரிய சேவைகள் இரண்டும் அடங்கிய பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திரத்திற்கு ஒவ்வொரு சேவைகளுக்கும் வெவ்வேறாக கட்டணம் அறவிடப்படும்.<br>2. மேலதிக பயணிகள் சேவைகள் அனுமதிப்பத்திர வீதித் திருத்தம் செய்யப்படுவது பிரதான பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திரத்திற்கு திருத்தம் செய்யும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஆகும். | 10,000.00 | I. இருக்கின்ற பயணிகள் சேவையின் வீதியை குறைத்தல் 10,000.00<br>II. இருக்கின்ற பயணிகள் சேவையின் வீதியை நீடித்தல் 15,000.00 |

| *தொ. இல.* | *அறவிடும் தலைப்பு* | *தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.)* | *உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்)* |
|---|---|---|---|
| | II. மாகாண சொகுசு பயணிகள் சேவைகள் வீதியை மாற்றுதற் கட்டணம். (பயணிகள் சேவை வீதியை மாற்றுததல் கட்டணம்) | | I. இருக்கின்ற பயணிகள் சேவை வீதியை நீடித்தல் 20,000.00<br>II. இருக்கின்ற பயணிகள் சேவை வீதியை குறைத்தல் 10,000.00 |
| 08 | ஒம்னி சிபாரிசுக் கடிதம் விநியோக (வழங்குதல்) கட்டணம் | 1,000.00 | 2,000.00 |
| 09 | பஸ் வண்டியை பிற சேவைக்காக விடுவித்தல் கடிதம் விநியோகக் (வழங்குதல்) கட்டணம் | 1,000.00 | 2,000.00 |
| 10 | நிதி (லீசிங்) கடன் வசதிகள் பெற்றுக் கொள்ள நிதி நிருவன்ங்களுக்கு அனுமதிப் பத்திர சிபாரிசு கடிதங்கள் விநியோகக் கட்டணம் | 1,000.00 | 2,000.00 |
| 11 | பஸ் வண்டி - பயணிகள் சேவைகளுக்கு தகுதிப் பரிசோதனை (அறிக்கை) கட்டணம் | 1,000.00 | 1,000.00 |
| 12 | புதிய பயணிகள் சேவைகளுக்கு அனுமதிப் பத்திரம் மற்றும் பயணிகள் சேவைகள் திருத்தங்களுக்கான பரிசோதனை ஆய்வு அறிக்கைக் கட்டணம் | | I. ஒரு பக்க பயணிகள் சேவை பகுதிக்கு 50 கி.மீ. க்கு மேல் 15,000.00<br>II. ஒரு பக்க பயணிகள் சேவை பகுதிக்கு 50 கி.மீ. க்கு குறைந்த 10,000.00 |
| 13 | மாகாணங்களுக்கிடையிலான பஸ் வண்டிக்கான நேர அட்டவணை உறுதிப் படுத்தல் சிபாரிசு கடிதம் வழங்குதல் கட்டணம் | | 10,000.00 |
| 14 | பஸ் பயணிகள் சேவைகளுக்கு நேர அட்டவணை / பயணிகள் சேவை பஸ் கட்டண பிரதி கட்டணம் (ஒரு பிரதிக்கு) | | 100.00 |
| 15 | சாதாரண பயணிகள் சேவைகள் / சொகுசு பயணிகள் சேவைகள் / சிசு செரிய சேவைகள் / மேலதிக பயணிகள் சேவைகள்/ சாதாரண பயணிகள் சேவைகள் மற்றும் சிசு செரிய சேவைகள் இரண்டும் அடங்கிய சேவைகள்/ கெமி செரிய பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திர வருடாந்த புதுப்பித்தல் காலதாமத கட்டணம் | I. 01 நாள் தொடக்கம் 01 மாதம் வரை 500.00<br>II. 01 மாதம் தொடக்கம் 02 மாதம் வரை 1000.00<br>III 02 மாதம் தொடக்கம் 03 மாதம் வரை 2,500.00<br>IV. 03 மாதம் தொடக்கம் 04 மாதம் வரை 3,500.00<br>V. 04 மாதத்திற்கு மேல் 5,000.00 | I. 01 நாள் தொடக்கம் 01 மாதம் வரை 500.00<br>II. 01 மாதம் தொடக்கம் 02 மாதம் வரை 1,000.00<br>III. 02 மாதம் தொடக்கம் 03 மாதம் வரை 2,500.00<br>IV. 03 மாதம் தொடக்கம் 04 மாதம் வரை 3,500.00<br>V. 04 மாதம் தொடக்கம் 06 மாதம் வரை 5,000.00<br>VI. 06 மாதம் தொடக்கம் 01 வருடம் வரை 10,000.00<br>VII. 01 வருடம் தொடக்கம் 02 வருடம் வரை 20,000.00<br>VIII. பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட நாள் தொடக்கம் 36 மாதங்களின் பின்னர் அனுமதிப் பத்திரம் செல்லுபடியற்றதாகிவிடும். |

| தொ. இல. | அறவிடும் தலைப்பு | தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.) | உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்) |
|---|---|---|---|
| 16 | I. சாதாரண பயணிகள் சேவைகள் / சிசு செரிய சேவைகள் / கெமி செரிய பயணிகள் சேவைகள் / மேலதிக சேவைகள் / சாதாரண பயணிகள் சேவைகள் மற்றும் சிசுசெரிய சேவைகள் இரண்டும் அடங்கிய பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திரம் புத்தகம் காணமற் போகும் சந்தர்ப்பத்தில் அல்லது அனர்த்த நிலமையின் போது அதன் அனுமதிப் பத்திரம் புத்தகப் பிரதி ஒன்றை விநியோகக் கட்டணம். | 5,000.00 | 5,000.00 |
| | II. பாடசாலை போக்குவரத்து / அலுவலக போக்குவரத்து / ஆடைத் தொழிற்சாலை வேன் வண்டி மற்றும் பஸ் வண்டி அனுமதிப் பத்திரம் காணமற் போகும் சந்தர்ப்பத்தில் அல்லது அனர்த்த நிலமையின் போது அதன் அனுமதிப் பத்திரம் புத்தகப் பிரதி ஒன்றை விநியோகக் கட்டணம். | | 2,000.00 |
| 17 | சாதாரண பயணிகள் சேவைகள் / சிசு செரிய சேவைகள் / கெமி செரிய பயணிகள் சேவைகள் / மேலதிக பயணிகள் சேவைகள் / சாதாரண பயணிகள் சேவைகள் மற்றும் சிசு செரிய சேவைகள் இரண்டும் அடங்கிய பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திரம் / பாடசாலை போக்குவரத்துச் சேவைகள் / அலுவலக போக்குவரத்து சேவைகள்/ ஆடைத் தொழிற்சாலை சேவை / வேன் வண்டி மற்றும் பஸ் வண்டி அனுமதிப் பத்திர புத்தக பக்கம் முடிவடைந்த பின்னர் புதிய வீதி அனுமதிப் பத்திர புத்தகம் ஒன்றை வழங்குவதற்கான கட்டணம். | | 500.00 |
| 18 | தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுடன் தொடர்புடைய சிசு செரிய மற்றும் கெமி செரிய ஒப்பந்தங்களை புதுப்பித்தல் ஆவணத் தயாரித்தல் கட்டணம். | | 5,000.00 |
| 19 | சிசு செரிய மாதாந்த குறிப்பு லொக் பத்திர கட்டணம் | 600.00 | 1,000.00 |
| 20 | கெமி செரிய மாதாந்த குறிப்பு லொக் பத்திர கட்டணம் | | 1,000.00 |

| *தொ. இல.* | *அறவிடும் தலைப்பு* | *தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.)* | *உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்)* |
|---|---|---|---|
| 21 | சிசு செரிய மற்றும் செமி செரிய பயணிகள் சேவைகளுக்கு கருத்திற்கொள்ளும் மாதத்திற்கு முன்னர் மாதத்தின் உரிய மாதாந்த குறிப்பு (லொக்) பத்திரம் பெற்றுக் கொள்ளாத போது மாதத்திற்கு அறவிடப்படும் தாமதக் கட்டணம். | | 500.00 |
| 22 | மாகாண சொகுசு பயணிகள் சேவைகள் மாதாந்த குறிப்பு (லொக்) பத்திர கட்டணம் | | 1,200.00 |
| 23 | விஷேட சுற்றுலா அனுமதி பத்திர கட்டணம் | I. 01 நாளைக்கு 400.00<br>II. அதிகரிக்கும் ஒவ்வொரு நாளைக்கும் 200.00 | I. மாகாண எல்லைக்குள்ளான விஷேட சுற்றுலா பயணம்<br>• 01 நாளைக்கு 300.00<br>• அதிகரிக்கும் ஒவ்வொரு நாளைக்கும் 200.00<br>II. மாகாண எல்லையைத் தாண்டிய விஷேட சுற்றுலா<br>• 01 நாளைக்கு 500.00<br>• அதிகரிக்கும் ஒவ்வொரு நாளைக்கும் 300.00 |
| 24 | பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் கொண்ட பேருந்துக்கு (ஒரு நாள் தற்காலிக பயணிகள் சேவை அனுமதி) கட்டணம். (ஒரு நாளைக்கு) | 300.00 | I. A/ A1 பயணிகள் சேவைகள் வீதி 1,000.00<br>II. B/ B1 பயணிகள் சேவைகள் வீதி 1,000.00<br>III. C பயணிகள் சேவைகள் வீதி 500.00<br>IV. D பயணிகள் சேவைகள் வீதி 500.00 |
| 25 | தற்காலிக பயணிகள் சேவைகளை (பரிசோதனை) அனுமதிப் பத்திரக் கட்டணம் | | I. 30 நாள் காலத்திற்கு 3,000.00<br>II. 60 நாள் காலத்திற்கு 10,000.00 |
| 26 | பயணிகள் சேவைகளை அனுமதிப் பத்திர பஸ் வண்டி தற்காலிகமாக மாற்றக் கட்டணம் (நாள் ஒன்றிற்கு) | | I. A/A 1 வகைக்குரிய பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்திற்கு நாள் ஒன்றிற்கு – 1500.00<br>II. B /B 1 வகைக்குரிய பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்திற்கு நாள் ஒன்றிற்கு – 1000.00<br>III. C வகைக்குரிய பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்திற்கு நாள் ஒன்றிற்கு – 800.00<br>IV. D வகைக்குரிய பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்திற்கு நாள் ஒன்றிற்கு – 600.00 |

| *தொ. இல.* | *அறவிடும் தலைப்பு* | *தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.)* | *உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்)* |
|---|---|---|---|
| 26 | பயணிகள் சேவைகளை அனுமதிப் பத்திர பஸ் வண்டி தற்காலிகமாக மாற்றக் கட்டணம் (நாள் ஒன்றிற்கு) | | V. ஒரு பகுதிக்கு 30 கி.மீ. தூரத்திற்கு மேலான சிசு செரிய மற்றும் செமி செரிய பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்திற்கு நாள் ஒன்றிற்கு 1000.00<br>VI. ஒரு பகுதிக்கு 30 கி.மீ. தூரத்திற்கு குறைந்த சிசு செரிய மற்றும் செமி செரிய பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்திற்கு நாள் ஒன்றிற்கு 500.00 |
| 27 | பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ் வண்டி நிருவாக சேவைகள் கட்டணம் | 100.00<br>( பஸ் வண்டி பயணிகள் சேவையில் ஈடுபடும் சந்தர்பத்தில் ஒரு நாளைக்கு ) | 100.00<br>(பஸ் வண்டி பயணிகள் சேவையில் ஈடுபடும் சந்தர்பத்தில் ஒரு நாளைக்கு) |
| 28 | பாடசாலை போக்குவரத்துச் சேவைகள் / அலுவலக போக்குவரத்து சேவைகள்/ ஆடைத் தொழிற்சாலை சேவைகள்/ வேன் வண்டி மற்றும் பஸ் வண்டி அனுமதிப் பத்திர புதிய பதிவிற்காண கட்டணம் | - | 500.00 |
| 29 | பாடசாலை போக்குவரத்துக்கான பஸ் வண்டி புதிய பதிவு மற்றும் அனுமதிப் பத்திர உரிமை மாற்றுதற் கட்டணம். | 10,000.00 | 10,000.00 |
| 30 | பாடசாலை போக்குவரத்து சேவை மற்றும் அலுவலக போக்குவரத்து சேவை வேன் வண்டி புதிய பதிவு மற்றும் அனுமதிப்பத்திர உரிமம் மாற்றுதல் கட்டணம் | - | 3,500.00 |
| 31 | அலுவலக போக்குவரத்து சேவை மற்றும் ஆடைத் தொழிற்சாலை போக்குவரத்து சேவைகளை வழங்கும் பஸ் வண்டி அனுமதிப் பத்திர உரிமை மாற்றல் கட்டணம். | - | 25,000.00 |
| 32 | பாடசாலை சேவைகள் / அலுவலக சேவைகள்/ ஆடைத் தொழிற்சாலை போக்குவரத்து சேவைகளை வழங்கும் வேன் வண்டிகளுக்கு வருடாந்த அனுமதிப் பத்திர புதுப்பித்தல் கட்டணம். | ஆசனத்திற்கு 100.00 | ஆசனத்திற்கு 100.00 |
| 33 | பாடசாலை சேவைகள் / அலுவலக சேவைகள்/ ஆடைத் தொழிற்சாலை சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்த வேன் வண்டியை அல்லது பஸ் வண்டிக்கு பதிலாக வேறு வாகனத்தை மாற்றக் கட்டணம் | | I. வேன் வண்டிகளுக்கு 2,500.00<br>II. பஸ் வண்டிகளுக்கு 5,000.00 |

| *தொ. இல.* | *அறவிடும் தலைப்பு* | *தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.)* | *உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்)* |
|---|---|---|---|
| 34 | பாடசாலை சேவைகள் / அலுவலக சேவைகள்/ ஆடைத் தொழிற்சாலை சேவைகளை வழங்கும் வேன் வண்டி மற்றும் பஸ் வண்டிகள் அனுமதிப் பத்திர வருடாந்த அனுமதி பத்திர புதுப்பித்தல் கால தாமதக் கட்டணம் | I. 01 நாள் தொடக்கம் 07 நாட்கள் வரை – 200.00<br>II. 07 நாட்கள் தொடக்கம் 01 மாதம் வரை – 400.00<br>III. 01 மாதம் தொடக்கம் 03 மாதங்கள் வரை – 750.00<br>IV. 03 மாதம் தொடக்கம் 06 மாதங்கள் வரை – 1,000.00<br>V. 06 மாதங்களின் பின்னர் அனுமதிப்பத்திரம் இரத்தாகும் | I. 01 நாள் தொடக்கம் 03 மாதங்கள் வரை 500.00<br>II. 03 மாதங்கள் தொடக்கம் 01 வருடம் வரை 750.00<br>III. 01 வருடம் தொடக்கம் 02 வருடங்கள் வரை 1000.00<br>IV. 02 வருடங்களின் பின்னர் அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படும் |
| 35 | பயணிகள் சேவையில் ஈடுபடும் புதிய பஸ் நடத்துனர் (கண்டக்டர்) அனுமதி அடையாள அட்டை மற்றும் பயணிகள் சேவை சாரதி அடையாள அட்டை பதிவுக் கட்டணம். (செல்லுபடியாகும் காலம் ஒரு வருடமாகும்.) | I. நடத்துனர் அனுமதிப்பத்திரம் 2,000.00<br>II. சாரதி அடையாள அட்டை 2,500.00 | 4,000.00 |
| 36 | முன்னைய வருடத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ் நடத்துனர் (கண்டக்டர்) பயிற்சி சான்றிதழ் பெற்று நடத்துனர் அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளவர் மீண்டும் பதிவு செய்வதற்கான கட்டணம். | - | 4,000.00 |
| 37 | பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ் நடத்துனர் (கண்டக்டர்) அனுமதி அடையாள அட்டை மற்றும் பயணிகள் சேவை சாரதி அடையாள அட்டையை வருடாந்த புதுப்பித்தல் கட்டணம் | 1,000.00<br>(ஒரு வருடத்திற்கு) | 3,000.00<br>(02 வருடங்களுக்கு ஒரே தடவையில் வழங்குதல்) |
| 38 | பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ் நடத்துனர் (கண்டக்டர்) அனுமதி அடையாள அட்டை மற்றும் பயணிகள் சேவை சாரதி அடையாள அட்டை காணமல் போன சந்தர்ப்பத்தில் பிரதி அடையாள அட்டைக் கட்டணம் (தற்காலிக / நிரந்தர அடையாள அட்டை) | 500.00 | 2,000.00 |

| தொ. இல. | அறவிடும் தலைப்பு | தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.) | உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்) |
|---|---|---|---|
| 39 | நிரந்தர பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ் நடத்துனர் (கண்டக்டர்) அனுமதி; அடையாள அட்டை மற்றும் பயணிகள் சேவை சாரதி அடையாள அட்டை வருடாந்தம் புதுப்பித்தல் கால தாமதக் கட்டணம். | I. 01 நாள் தொடக்கம் 07 நாட்கள் வரை 200.00<br>II. 07 நாட்கள் தொடக்கம் 01 மாதம் வரை 400.00<br>III. ஒரு மாதம் தொடக்கம் 03 மாதங்கள் வரை 750.00<br>IV. 03 மாதங்கள் தொடக்கம் 06 மாதங்கள் வரை 1,000.00<br>V. 06 மாதங்களின் பின்னர் நடத்துனர் அனுமதிபத்திரம் இரத்துச் செய்யப்படும் | I. 01 நாள் தொடக்கம் 07 நாட்கள் வரை 200.00<br>II. 07 நாட்கள் தொடக்கம் 01 மாதம் வரை 400.00<br>III. 01 மாதம் தொடக்கம் 03 மாதங்கள் வரை 750.00<br>IV. 03 மாதங்கள் தொடக்கம் 06 மாதங்கள் வரை 1,000.00<br>V. 06 மாதங்கள் தொடக்கம் 12 மாதங்கள் வரை 2,500.00<br>VI. 12 மாதங்களின் பின்னர் நடத்துனர் அனுமதிப்பத்திரம் மற்றும் சாரதி அடையாள அட்டை இரத்துச் செய்யப்படும். |
| 40 | பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ் நடத்துனர் (கண்டக்டர்) மற்றும் பயணிகள் சேவை சாரதி பயிற்சிக்கு சமுகமளிக்காமை (தண்டப்) விதிப்பு கட்டணம் | 1,500.00 | 2,000.00 |
| 41 | முச்சக்கர வண்டிகள் புதிய பதிவிற்கான அனுமதிப் பத்திர விண்ணப்பபடிவக் கட்டணம் | - | 100.00 |
| 42 | முச்சக்கர வண்டி புதிய அனுமதிப்பத்திர பதிவு செய்தற் கட்டணம் | I. அனுமதிக்கப்பட்ட முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கு 3,000.00<br>II. வீட்டுப் பாவனை 1,000.00 | I. மாநகர சபை / நகர சபை அதிகார பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட வாகன தரிப்பிடம் ஒன்றிற்கு புதிய முச்சக்கர வண்டி ஒன்றை உள்ளீடு செய்தல். 5,000.00<br>II. பிரதேச சபை அதிகார பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட வாகன தரிப்பிடம் ஒன்றிற்கு முச்சக்கர வண்டியை உட்படுத்தல் செய்தல். 3,000.00<br>III. வீட்டுப் பாவனை புதிய முச்சக்கர வண்டிகள் 1,500.00 |
| 43 | முச்சக்கர வண்டி வருடாந்தம் அனுமதிப் பத்திர புதுப்பித்தல் கட்டணம். | 750.00 | I. மாநகர சபை / மாநகர சபை அதிகாரப் பிரதேசங்களுக்கு 1,000.00<br>II. பிரதேச சபை அதிகார பிரதேசங்களில் 750.00 |

| *தொ. இல.* | *அறவிடும் தலைப்பு* | *தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.)* | *உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்)* |
|---|---|---|---|
| 44 | முச்சக்கர வண்டி அனுமதிப் பத்திர உரிமை மாற்றக் கட்டணம் | 5,000.00 | I. மாநகர சபை / மாநகர சபை அதிகார பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட வாகன தரிப்பிடத்தின் அனுமதி பத்திரத்தை உரிமை மாற்றுதல் (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகள் தவிர்ந்த) 15,000.00<br><br>II. பிரதேச சபை அதிகார பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட வாகன தரிப்பிடத்தின் அனுமதி பத்திரத்தை உரிமை மாற்றுதல் (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகள் தவிர்ந்த) 5,000.00<br><br>III. வீட்டுப் பாவணைக்காக பதிவு செய்யப்பட்ட அனுமதிப் பத்திரத்தை உரிமை மாற்றுதல் 1,500.00<br><br>IV. மாநகர சபை / நகர சபை அதிகார பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட அனுமதிப் பத்திரம் உரிமை மாற்றுதல் (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகளுக்கு) 5,000.00<br><br>V. பிரதேச சபை அதிகார பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட அனுமதிப் பத்திர உரிமை மாற்றுதல் (வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகளுக்கு) 3,000.00 |
| 45 | முச்சக்கர வண்டிகள் வருடாந்தம் அனுமதிப் பத்திர புதுப்பித்தல் காலதாமத தண்டக் கட்டணம் | I. 01 நாள் தொடக்கம் 07 நாட்கள் வரை 100.00<br>II. 07 நாட்கள் தொடக்கம் 01 மாதம் வரை 250.00<br>III. 01 மாத்திற்கு மேல் 750.00 | I. 01 நாள் தொடக்கம் 01 மாதம் வரை 100.00<br>II 01 மாதம் தொடக்கம் 12 மாதங்கள் வரை 250.00<br>III. 01 வருடம் தொடக்கம் 03 வருடங்கள் வரை – வருடத்திற்கு 500.00<br>IV. வருடங்களின் பிற்பாடு அனுமதிப் பத்திரம் செல்லுபடியற்றதாகும். |
| 46 | முச்சக்கர வண்டிகள் புதிய தரிப்பிடங்கள் பதிவு செய்தல் கட்டணம் | | I. மாநகர சபை / நகர சபை அதிகார பிரதேசங்களில் 5,000.00<br>II. பிரதேச சபை அதிகார பிரதேசங்களில் 3,000.00 |

| தொ. இல. | அறவிடும் தலைப்பு | தற்போதைய அறவிடும் கட்டணம். (ரூ.) | உத்தேச கட்டண விபரங்கள் (ரூ.) (நிபந்தனைக்கு உட்பட்டதாகும்) |
|---|---|---|---|
| 47 | பதிவு செய்த முச்சக்கர வண்டிகள் தரிப்பிடத்தில் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் தொழில் செய்பவர்களை ஆரம்ப பதிவு செய்தல் கட்டணம் | 3,000.00 | 1,000.00 |
| 48 | முச்சக்கர வண்டி சாரதி அனுமதிப் பத்திரக் கட்டணம் | - | 500.00 |
| 49 | பதிவு செய்த முச்சக்கர வண்டிக்கு பதிலாக வேறு ஒரு முச்சக்கர வண்டி ஒன்றை மாற்றுதல் கட்டணம் | - | 500.00 |
| 50 | முச்சக்கர வண்டி அனுமதிப் பத்திர புத்தகத்தின் பிரதிக்கான கட்டணம் | - | 2,000.00 |
| 51 | வழங்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகள் அனுமதிப் பத்திர புத்தகம் (பக்கங்கள்) முடிவடைந்தவுடன் புதிய புத்தக விநியோகக் கட்டனம் | - | 500.00 |

பொருள் கோடல்

01. பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்கள் நீடிப்பு செய்தல்

பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்கள் வருடாந்தம் புதுப்பித்தல் செய்யும் போது பஸ் வண்டியின் முழுமை காப்புறுதி காலத்திற்கு ஏற்ப காலம் நீடிக்கப்படும். காப்புறுதி காலம் மற்றும் அனுமதிப் பத்திர காலம் சமனாகாத சந்தர்ப்பத்தில் மீண்டும் காப்புறுதி சமர்ப்பித்த பின்னர் 12 மாதங்கள் முழுமையடையும் விதத்தில் அனுமதிப் பத்திர காலம் நீடிப்பு செய்யப்படும்.

02. மேலதிக பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்கள்

நிலையான பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்திற்கு மேலதிகமாக அல்லது யாதாயினும் ஒரு பயணிகள் சேவைகள் வெற்றிடம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் சேவையில் ஈடுபடுவதற்கான விஷேட நிபந்தனைகளின் கீழ் வழங்கப்படும் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரமாகும்.

03. பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களை வகைப்படுத்தல் – அனுமதிப் பத்திரங்கள் வகைப்படுத்தல் 02 விதிமுறையை மையமாகக் கொண்டது.

முதலாவது விதிமுறை – வீதியின் தூரம் (ஒரு பகுதிக்கு)

இந்த விதி முறைக்கு உட்படும் பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திரங்கள் A,B,C மற்றும் D என பெயரிடப்படும்.

I. ஒரு பகுதிக்கான தூரம் 40 கி.மீ. மேற்பட்ட பயணிகள் சேவைகள் - A
II. ஒரு பகுதிக்கான தூரம் 30 - 40 கி.மீ. இடையிலான பயணிகள் சேவைகள் - B
III. ஒரு பகுதிக்கான தூரம் 20 - 30 கி.மீ. இடையிலான பயணிகள் சேவைகள் - C
IV. ஒரு பகுதிக்கான தூரம் 20 கி.மீ. குறைந்த பயணிகள் சேவைகள் - D

**இரண்டாவது விதிமுறை –** பயணிகள் சேவையின் தூரம் (ஒரு பகுதிக்குள்) போக்குவரத்து நேரம் (பயணிகளின் கேள்வி அதிகமுள்ள நேரங்கள்) மற்றும் போக்குவரத்து சேவையின் எண்ணிக்கை.

இந்த விதிகளுக்கு உட்படும் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் A1 மற்றும் B1 என பெயரிடப்படும்.

I. A தரத்திலான போக்குவரத்து பயணிகள் சேவையின் மற்றும் பயணிகள் சேவை போக்குவரத்து கேள்வி அதிகரித்த கால பகுதிக்குள் தரிப்பிட கால நேரங்கள் இருப்பது அல்லது குறித்த போக்குவரத்து பயணிகள் சேவையின் பஸ் வண்டிகளுக்கு காணப்படும் பொது தரிப்பிட காலத்திற்கு மேலதிகமாக தரிப்பிட காலம் உள்ள அனுமதிப்பத்திரம் - A1

II. B தரத்திலான பயணிகள் சேவை மற்றும் பயணிகள் சேவைகளின் கேள்வி அதிகரித்த போக்குவரத்து கால நேரங்கள் இருப்பது அல்லது குறித்த வீதியில் பஸ் வண்டிகளுக்கு காணப்படும் பொது தரிப்பிட காலத்திற்கு மேலதிகமாக தரிப்பிட காலம் உள்ள அனுமதிப்பத்திரம் - B1

04. விஷேட சுற்றுலா அனுமதிப் பத்திரம்
பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் உள்ள பஸ் வண்டியொன்று விஷேட சுற்றுலா மற்றும் வேறு போக்குவரத்து சுற்றுலா நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் போது சேவையில் ஈடுபட உத்தேசித்துள்ள நாட்களுக்கு பஸ் வண்டியை சேவையில் ஈடுபடுத்த முன்னர் உரிய தொகை செலுத்தி பஸ் நிலையம் ஒன்றில் விஷேட சுற்றுலா அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் விஷேட அனுமதிப் பத்திரமாகும்.

05. தொழில்நுட்ப பெறுமதியை கணக்கீடு செய்வது
பஸ் வண்டியின் ஆசனங்கள் எண்ணிக்கை x ஏற்றும் காரணி x முழு பஸ் கட்டணம் x அன்றாட போக்குவரத்து எண்ணிக்கை x பஸ் வண்டி போக்குவரத்திற்கு குறித்த வருடத்தின் தினங்களின் எண்ணிக்கை x வருடாந்த வருமானத்தில் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படும் வீதம் பெறுமானமாக கணக்கில் எடுக்க வேண்டும்.

06. தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம்.
பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் அனுமதிப் பத்திர உரிமையாளர் பஸ் வண்டி ஒன்று அனுமதிக்கப்பட்ட போக்குவரத்து வீதிக்கு அப்பால் சேவை தேவையின் நிமித்தம் வேறு பயணிகள் சேவை வீதி ஒன்றில் போக்குவரத்தில் ஈடுபட செய்யும் போது, போக்குவரத்திற்கு முன்னர் பஸ் நிலையத்திலிருந்து அந்த பயணிகள் சேவை வீதிக்கு பெற்றுக் கொள்ளப்படும் அனுமதிப் பத்திரமாகும்.

07. தற்காலிக பஸ் வண்டி மாற்றல் அனுமதிப்பத்திரம்
பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் ஒன்றிற்கு பயன்படுத்தப்படும் பஸ் வண்டி ஒன்று அவசர அனர்த்த நிலைக்கு உள்ளாகும் போது அந்த சேவையை தொடர்ச்சியாக வழங்கும் நோக்கில் தற்காலிகமாக வேறு பஸ் வண்டி ஒன்றை சேவையில் ஈடுபடுத்த வழங்கப்படும் அனுமதிப்பத்திரமாகும்.

08. பயணிகள் சேவை வீதி மாற்றம் செய்தல்
பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட வீதி ஒன்றை நீடிப்புச் செய்தல் அல்லது குறைப்புச் செய்தல் வீதிகள் திருத்தம் என பொருள்கொள்ளப்படும். நிபந்தனைகளின் கீழ் வீதிகள் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

09. போக்குவரத்து பரிசோதனை தற்காலிக அனுமதிப்பத்திரம்
அடையாளம் காணப்பட்ட புதிய வீதி ஒன்றிற்கு நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்றை வழங்க முன்னர் தேவைப்பிரகாரம் போக்குவரத்து நேரங்கள் மற்றும் வருமான நிலை அடையாளம் காண்பதற்கு வழங்கப்படும் தற்காலிக அனுமதிப்பத்திரம்.

10. பஸ் வண்டிகள் பரிசோதனை அறிக்கை
பஸ் வண்டி ஒன்றிற்கு தகமை சார்புச் சான்றிதழ் பெற்றுக்கொண்ட பின்னர் பயணிகள் போக்குவரத்திற்கு பயணிகள் சேவைக்கு பொருத்தமான தன்மையில் உள்ளதா என்பது பற்றி பரிசோதித்து வழங்கப்படும் அறிக்கை.

11. பஸ் வண்டிகள் விடுவித்தல் கடிதம்
மாகாண அனுமதிப்பத்திரதாரர் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ் வண்டி ஒன்று வேறு போக்குவரத்து அதிகார சபையின் அல்லது போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரத்தை பெற்று போக்குவரத்தில் ஈடுபடும் போது மாகாண போக்குவரத்திலிருந்து விடுபட்டதாக அறிவிக்கும் ஒரு ஆவணமாகும்.

12. ஓமினி கடிதங்கள்
பொது பயணிகள் சேவை போக்குவரத்து பதிவு செய்யப்பட்ட பஸ் வண்டி ஒன்றிற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு பஸ் வண்டியின் பதிவுச் சான்றிதழின் வரி வகுப்பு "ஓமினி" என பதிவு செய்வதற்காக வழங்கப்படும் சிபாரிசு கடித ஆவணமாகும்.

13. கடன் நிதி சம்பந்தமான (லீசிங் கம்பனிக்கு) அனுமதிப் பத்திர சிபாரிசு கடிதங்கள்
பஸ் வண்டி ஒன்றிற்கு லீசிங் வசதிகளை பெற்றுக்கொள்ள பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்றை வழங்க முடியும் என குறிப்பிடும் ஆவணமாகும்.

14. பஸ் வண்டிகளுக்காக நிருவாக சேவைகள் கட்டணங்கள்
அன்றாட போக்குவரத்தில் ஈடுபடும் பஸ் வண்டி ஒன்றினால் ஒரு பஸ் நிலையத்தில் நாள் ஒன்றில் ஒரு தடவை மட்டும் அறவிடப்படும் கட்டணமாகும்.

**நிபந்தனைகள்**

1. A, A1, B, B1 வகை/ தொகுதி அனுமதிப் பத்திரங்களுக்கு டெண்டர் ஒழுங்கு விதிகளை பின்பற்றும் போது அந்தந்த தொகுதி சாதாரண பயணிகள் சேவை அனுமதிப் பத்திர உரிமை மாற்றம் செய்தல் கட்டண முறையை மையப்படுத்தி குறைந்த கேள்வி நியமம் செய்தல் வேண்டும்.

2. சகல பயணிகள் சேவை அனுமதிப் பத்திர வகைக்கும், பயணிகள் சேவை அனுமதிப் பத்திர உரிமையாளரின் பெயரில் பஸ் வண்டியும் (பெயரில்) இருத்தல் கட்டாயமாகும், இது வரை அவ்வாறு இல்லாத அனுமதிப் பத்திரங்களும் பஸ் வண்டிகளும், புதிய கட்டண திருத்தம் செய்யப்பட்டு ஒரு வருடத்திற்குள் (முன்னர்) இந்த நியதியை கட்டாயம் பூரணப்படுத்தியிருக்க (பெயர் மாற்றம் செய்யபட) வேண்டும்.

3. பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்று நிரந்தரமாக இரத்துச் செய்தல், வீதிப் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையின் 1994 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பட்டயத்தின் 2 ஆவது பிரிவின் 13.2 ஆ உறுப்புரைக்கமைய செய்யப்படும்.

4. மேலதிக பயணிகள் சேவைகள் அனுமதிப் பத்திரம் வழங்குதல் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் செய்யப்படும் :-

    I. மேலதிக பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்கள் உரிமை வாழ்க்கை துணைவி மற்றும் பிள்ளைகள் தவிர்ந்த எந்த தரப்பினருக்கும் உரிமை மாற்றம் செய்யப்படமாட்டாது.
    II. மேலதிக பயணிகள் சேவை அனுமதிப் பத்திரதிற்கு நிரந்தர பயணிகள் நேரசூசி வழங்கப்பட மாட்டாது.
    III. மேலதிக பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்றை வைத்திருப்பவர் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப் பத்திரமாகவோ அல்லது நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக் கொள்வதற்கான முன் தகைமையாக இருக்காது.
    IV. ஒவ்வொரு மாதமும் பயணிகள் சேவைகள் மாதாந்த குறிப்பு (லொக்) பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. பயணிகள் சேவை நடாத்துனர் (கண்டக்டர்) அனுமதிப் பத்திரம் மற்றும் பயணிகள் சேவை சாரதி அடையாள அட்டை வழங்கும் போது விண்ணப்பதாரர் 60 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும், எழுத்தறிவு மற்றும் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி 60 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பினும் எழுத்தறிவு மற்றும் தேக ஆரோக்கியம் இருப்பின் அந்த வேண்டுதலை கருத்திற்கொள்வது பற்றி அதிகார சபைக்கு உரியதாகும்.

6. தற்காலிகமாக பஸ் வண்டிகள் மாற்றீடு பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்கும் போது பின்வரும் நிபந்தனைகளின் கீழ் செய்யப்படும்:-

I. சாதாரண பயணிகள் சேவை அல்லது சிசு செரிய சேவைகள் வழங்கும் பஸ் வண்டிக்கு உரிய சேவையை வழங்க முடியாத அவசர நிலமையின் போது (பஸ் வண்டியின் பராமரிப்பு, அவசர அனர்த்த நிலை போன்ற) மற்றும் அந்த சேவையை நிறைவு செய்துகொள்ள மேலதிக பயணிகள் சேவை அனுமதிப் பத்திரதாரர் பஸ் வண்டி ஒன்றை இல்லாத போது மாத்திரம் தற்காலிக பஸ் வண்டியை மாற்ற அனுமதி வழங்கப்படும்.

II. தற்காலிக பஸ் வண்டி மாற்றீடு அனுமதிப் பத்திரத்தின் ஆகக் கூடிய செல்லுபடியாகும் காலம் 14 நாட்களாகும். மேலதிக காலம் தேவைப்படின் அதற்காக விஷேட அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

III. உத்தேச கருமம் நிறைவடைந்த பின்னர் தற்காலிக பஸ் வண்டிக்கு மாற்றீடு அனுமதிப் பத்திரம் மீண்டும் அலுவலகத்திற்கு கையளித்தல் வேண்டும்.

IV. நிலையான அனுமதிப் பத்திரம் கொண்ட பயணிகள் சேவை நேரங்களில் மட்டும் இதன் மூலம் சேவை வழங்க வேண்டும். மேலும் சிசு செரிய சேவையையும் செய்கின்ற போது சாதாரண பயணிகள் சேவை போக்குவரத்து செய்தல் மற்றும் மேலதிக சேவை முழுமையாக தடை செய்யப்பட்டதாகும்.

V. நிலையான பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்று அல்லது மேலதிக பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக தற்காலிக பஸ் வண்டி மாற்றீடு அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்றுக் கொண்டிருப்பது எவ்விதத்திலும் தகைமையாக இருக்காது.

VI. தற்காலிக பஸ் வண்டிகள் மாற்றீடு அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவதற்கு பின்வரும் தேவைப்பாட்டை பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

- பஸ் வண்டியின் வருமான அனுமதிப் பத்திரத்திரம் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
- பஸ் வண்டியின் பதிவுச் சான்றிதழின் பிரதி இருத்தல் வேண்டும்.
- பஸ் வண்டியின் காப்புறுதி மற்றும் கட்டுப்பாடற்ற பயணிகள் காப்புறுதி செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
- போக்குவரத்திற்கு பொருத்தமானதாக சிறந்த தகமை சார்புடையதாக இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்த அரசாங்க பதிவு பெற்ற நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட தகமை சார்புச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பயணிகள் போக்குவரத்திற்கு உகந்த நிலையில் பஸ் வண்டி இருத்தல் வேண்டும்.
- பயணிகள் சேவை அனுமதிப் பத்திர உரிமையாளரின் பெயருக்கு பஸ் வண்டி இல்லாது விடின் இடுவதற்கு உத்தேசித்துள்ள பஸ் வண்டியின் பதிவு செய்த உரிமையாளரிடமிருந்து பஸ் வண்டியை போக்குவரத்தில் ஈடுபடுத்த அனுமதி வழங்குவது தொடர்பான உடன்படிக்கை கூற்று செய்த சத்தியக் கடதாசி. (குறித்த சேவையை மற்றும் வீதியை குறிப்பிட்டு)

7. பயணிகள் சேவை பாதை மாற்றத்தின் போது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்ட விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

I. பயணிகள் சேவை வகைக்கு ஏற்ப A மற்றும் B வகைகளுக்கு உட்படும் விதத்தில் பயணிகள் சேவை பாதை மாற்றம் செய்யப்பட மாட்டாது.

II. இருக்கின்ற பயணிகள் சேவை பாதையை விட்டு மற்றுமொரு பயணிகள் சேவை பாதைக்குக் மாற்றம் செய்யப்பட மாட்டாது.

III. பயணிகள் சேவை பாதை மாற்றத்திற்கு பின்னர் பாதை வகையீட்டுக்கு ஏற்ப பயணிகள் சேவை திருத்தக் கட்டணம் அறவிடப்படும்.

IV. பயணிகள் சேவை நீடிப்புச் செய்யும் போது D வகை வீதி ஒன்று C வகை வீதியாக மாற்றமடையும் போது D வகை புதிய அனுமதிப் பத்திர கட்டண பெறுமதி C வகை புதிய அனுமதிப் பத்திர கட்டண பெறுமதியிலிருந்து கழித்து, எஞ்சிய தொகை அறவிடப்படும்.

8. சாதாரண பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்றை சொகுசு சேவைகள் அனுமதிப் பத்திரமாக திருத்தம் செய்யும் போது கணக்கில் எடுக்கப்படும் தொழில்நுட்ப பெறுமதி கட்டணம் ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே செலுத்துதல் வேண்டும். தொழில்நுட்ப பெறுமதிக்கு ஏற்ப வருடாந்தமும் அறவிடப்படும் இந்த சேவைத் திருத்தம் செய்யவதற்கான பூரண உரிமை வீதிப் போக்குவரத்து சேவை அதிகார சபைக்கு உரியதாகும்.

9. சாதாரண பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம், சேவை திருத்தத்தின் கீழ் பெற்றுக் கொண்ட சொகுசு பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தை மீண்டும் சாதாரண சேவை அனுமதிப் பத்திரமாக மாற்றம் செய்வதற்கு விண்ணப்பம் செய்தால், இருந்த சாதாரண பயணிகள் சேவை போக்குவரத்து நேரசூசிகளை பெற்றுக் கொள்வதற்கு மேன் முறையீடு செய்யவதற்குரிய வீதி அனுமதிப் பத்திர உரிமையாளருக்கு உரிமை உள்ளதுடன், அது தொடர்பாக இறுதி முடிவு எடுப்பது வீதிப் போக்குவரத்து சேவை அதிகார சபைக்கு உரியதாகும்.

10. டெண்டர் மூலம் பெற்றுக் கொண்ட புதிய சொகுசு பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்று, வேறு எவ்வித பயணிகள் சேவை அனுமதிப் பத்திரமாக மீண்டும் மாற்றம் செய்யப்பட மாட்டாது.

11. பஸ் வண்டி போக்குவரத்து பரிசோதனை தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள பின்வரும் தேவைகளை பூரணப்படுத்துதல் வேண்டும் :-

I. பஸ் வண்டியின் வருமான அனுமதிப்பத்திரம் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
II. பஸ் வண்டியின் பதிவுச் சான்றிதழ் ஒம்னி ஆக இருத்தல் வேண்டும்.
III. பஸ் வண்டியின் காப்புறுதி மற்றும் கட்டுப்பாடற்ற பயணிகள் காப்புறுதி செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
IV. பயணிகள் சேவை போக்குவரத்திற்கு பொருத்தமானதாக சிறந்த தகமை சார்புடையதாக இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்த அரசாங்க பதிவு பெற்ற நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட தகமைச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பயணிகள் சேவை போக்குவரத்திற்கு உகந்த நிலையில் பஸ் வண்டி இருத்தல் வேண்டும்.
V. பயணிகள் சேவை போக்குவரத்து பரிசோதனை காலம் ஆகக் கூடியது 60 நாட்களாகும். காலம் நிறைவடைந்த பின்னர் தற்காலிக அனுமதிப்பத்திரம் மீண்டும் அலுவலகத்திற்கு கையளிக்க வேண்டும்.
VI. நிலையான பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் போது இந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருப்பது முன் தகைமையாக கொள்ளப்பட மாட்டாது.

12. புதிய கட்டணங்கள் வர்த்தமானியில் அறிவிக்கப்படும் திகதி வரை வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையினால் வழங்கப்பட்ட சகல சாதாரண பயணிகள் சேவை, மேலதிக பயணிகள் சேவை மற்றும் சிசுசெரிய சேவைகள் பயணிகள் சேவை அனுமதிப் பத்திர புதிய வகையீட்டுக்கு உட்படுவதுடன், புதிய கட்டணங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதி தொடக்கம் வழங்கப்படும் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்கள் அந்த வகையீட்டு நிபந்தனைகளின் கீழ் வழங்கப்படும்.

13. சிசு செரிய அனுமதிப் பத்திர உரிமையாளர் ஒருவர் அந்த சேவையை வழங்குவதை கைவிடும் சந்தர்ப்பத்தில், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் ஏற்படுத்தப்பட்ட சிசு செரிய அனுமதிப் பத்திர ஒப்பந்த காலம் மீதமாயிருப்பின் அனுமதிப் பத்திர உரிமை மாற்றீடு செய்தல் கட்டணம் புதிய விண்ணப்பதாரியினால் செலுத்த வேண்டும்.

14. பஸ் வண்டி ஒன்று 30 நாட்களுக்கு அதிக காலம் போக்குவரத்து செய்யாது விடின் அனுமதிப் பத்திர உரிமையாளரினால் உரிய படிவத்தை பூரணப்படுத்தி பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்துடன் அலுவலகத்திற்கு கையளிக்க வேண்டும். அந்த முறையை பின்பற்றிய அனுமதிப் பத்திரத்திற்கு மட்டும் பஸ் வண்டியை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த குறிப்பு லொக் பத்திரக் கட்டணம் விடுவிக்கப்படும்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு. -** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2026**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | - | வெள்ளி | 03.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 19.06.2026 |
| | | வெள்ளி | 10.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 26.06.2026 |
| | | வெள்ளி | 17.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 03.07.2026 |
| | | வெள்ளி | 24.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 10.07.2026 |
| | | வெள்ளி | 31.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 17.07.2026 |
| **ஓகத்து** | - | வெள்ளி | 07.08.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 24.07.2026 |
| | | வெள்ளி | 14.08.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 31.07.2026 |
| | | வெள்ளி | 21.08.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 07.08.2026 |
| | | வெள்ளி | 28.08.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 14.08.2026 |
| **செத்தெம்பர்** | - | வெள்ளி | 04.09.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2026 |
| | | வெள்ளி | 11.09.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2026 |
| | | வெள்ளி | 18.09.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 04.09.2026 |
| | | வெள்ளி | 25.09.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2026 |

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.